அரியலூர் பகுதியில் ஜிப்சம்

* 350 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் பகுதியில் கிடைக்கும் 'ஜிப்சம்' கல்லைக்கொண்டு தொழிற்சாலை ஏதேனும் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Gold found in Kanjamalai area.

* 351 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to exploit the Gold found in Kanjamalai and Pavalamalai in Salem district ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

தமிழ்நாட்டில் கிடைக்கும் பவழங்கள்

* 352 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : }
திரு. ஏ. எம். இராஜா : } மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பவழங்கள் எந்தெந்த மாவட்டங்களில் வெட்டி எடுக்கப்படுகின்றன ?

(இ) 1967-லிருந்து 1970 வரை எவ்வளவு பவழங்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

தாழங்குளம் கிராமம் அருகே காந்தக்கற்கள்

* 353 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்திலுள்ள தாழங்குளம் கிராமம் அருகில் காந்தம் இருப்பதாக அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அங்கு ஆராய்ச்சி நடத்தி காந்தம் எடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.